# அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்

<u>ந.க.எண்.15884/ 2021/ஆ(5)-1 நாள். 03.07.2021</u>

## <u>ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு</u>

இத்திருக்கோயிலில் மூலவர்,உற்சவர் மற்றும் இதர கற்சிலை திருமேனிகளுக்கும் திருக்கோவிலில் நடைபெறும் சண்முகார்ச்சனை மற்றும் தங்கதேர் கிரிவீதிஉலாவின் போது கீழ்கண்ட விவரப்படியான மலர் மாலைகள் மற்றும் மலர்கள் (உதிரி பூக்கள்) 1431 ஆம் பசலி (01.07.2021 முதல் 30-06-2022 முடிய) சப்ளை செய்யும் வகைக்கு தனித்தனியாக ஒப்பந்தப்புள்ளி வரவேற்கப்படுகிறது.

மேற்படி ஒப்பந்தப்புள்ளி 23.07.2021 பிற்பகல் 2-00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும். மேற்படி தேதியில் மாலை 4-00 மணிக்கு ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும்.

| வ. எண். | (1) மூலவர் ,உற்சவர் மற்றும் இதர கற்சிலை திருமேனிகளுக்கு மலர் மாலைகள், உதிரி மலர்கள் தேவை விவரம் | | எண்ணிக்கை | | விலை விவரம் |
|---|---|---|---|---|---|
| | | | சிறியது | பெரியது | |
| 1. | மூலவர் | 3 அடி மாலை ஒரு பக்கம் (அரளி மற்றும் சம்மங்கி ) | 7 | 1 | 1-க்கு ரேட் |
| 2. | உற்சவர் | 1 1/2 அடி மாலை ஒரு பக்கம் (அரளி மற்றும் சம்மங்கி ) | 2 | 1 | 1-க்கு ரேட் |
| 3. | இதர கற்சிலை திருமேனிகள் (ஒரு அடி பக்கத்திற்கு ) | | 25 | - | 1-க்கு ரேட் |

| வ. எண். | (2) சண்முகார்ச்சனை மலர் மாலைகள், உதிரி மலர்கள் தேவை விவரம் | எண்ணிக்கை | விலை விவரம் |
|---|---|---|---|
| 1. | ஆர மாலை 1 அடி மாலை ( பக்கத்திற்கு 1 அடி) | 11 | 1-க்கு ரேட் |
| 2. | விடுபூ ( உதிரி மலர்கள்) | (2 கிலோ) | ரேட் |

| வ. எண். | (3) தங்கதேர் கிரிவீதி உலா மலர் மாலைகள், மலர்கள் தேவை விவரம் | எண்ணிக்கை | விலை விவரம் |
|---|---|---|---|
| 1. | சுவாமி , அம்மாள் சம்மங்கி மாலை (1 1/2 அடி பக்கத்திற்கு ) | 3 | 1-க்கு ரேட் |
| 2. | தங்கரத பிரம்மா மாலை ( செவ்வரளி ) சிறியது (ஒரு அடி பக்கத்திற்கு ) | 1 | 1-க்கு ரேட் |
| 3. | தங்கதேர் கிரிவீதிஉலா உபயதாரர் (செவ்வரளி) 1 அடி மாலை ( பக்கத்திற்கு 1 அடி) | 1 | 1-க்கு ரேட் |

### <u>தனி நிபந்தனைகள்</u>

1. ஒப்பந்தப்புள்ளி கொடுப்பவர் ரூ.500/-ஐ (ரூபாய் ஐநூறு மட்டும்) ஒப்பந்தப்புள்ளி வைப்பு தொகையாக " **செயல்அலுவலர், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர் என்ற பெயரில்"** கேட்பு வரைவோலை (Demand Draft) அசல் ஒப்பந்தப்புள்ளியுடன் இணைத்து கொடுக்க வேண்டும்.
2. மலர்மாலைகள் ஒப்பந்தப்புள்ளி கொடுப்பவர் இத்திருக்கோயிலில் நடைபெறும் சண்முகார்ச்சனை மற்றும் தங்கதேர் கிரிவீதிஉலாவிற்கு மலர்மாலைகள் தேவை விவரம் நன்கு தெரிந்து ஒப்பந்தப்புள்ளி கொடுப்பதாக கருதப்படும். ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்த பின்பு கூறும் எவ்வித ஆட்சேபணைகளும், ஆலோசனைகளும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
3. இத்திருக்கோயில் விசேட நாட்களுக்கு தேவைப்படும் மலர்மாலைகள் அவ்வப்போது தேவைக்கு ஏற்ப திருக்கோயில் உத்தரவுப்படி அவரது சொந்த பொறுப்பில் திருக்கோயிலில் நேரடியாக ஒப்படைக்கப்பட வேண்டும்.
4. ஒப்பந்தப்புள்ளி கொடுப்பவர் தனி நிபந்தனைகள் மற்றும் பொது நிபந்தனைகள் முழுவதும் நன்கு தெரிந்து ஒப்பந்தப்புள்ளி கொடுக்க வேண்டும்.
5. மூலவர், உற்சவர் மற்றும் இதர கற்சிலை திருமேனிகளுக்கு என குறிப்பிட்டு தனியே ஒப்பந்தப்புள்ளி கொடுக்கவேண்டும்
6. சண்முர்ச்சனைக்கு என குறிப்பிட்டு தனியே ஒப்பந்தப்புள்ளி கொடுக்க வேண்டும்
7. தங்கதேர் கிரிவீதி உலாவிற்கு என குறிப்பிட்டு தனியே ஒப்பந்தப்புள்ளியும் கொடுக்க வேண்டும்
8. தினசரி மற்றும் விஷேச நாட்கள் உட்பட நடைபெறும் சண்முகார்ச்சனை எத்தனை நபர்கள் என்று திருக்கோவில் உள்துறை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் முன்னரே நேரடியாக அறிந்து பூ,மாலைகள் சப்ளை செய்ய வேண்டும்.
9. தினசரி மற்றும் விஷேச நாட்கள் உட்பட தங்கதேர் கிரிவீதி உலா எத்தனை நபர்கள் என்று நாள்தோறும் உள்துறை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் நேரடியாக அறிந்து பூ,மாலைகள் சப்ளை செய்ய வேண்டும்.

**இரா.கண்ணன் ஆதித்தன், M.S(USA)**
**தக்கார்**

**ம.அன்புமணி,M.A.,B.l.,**
**இணைஆணையர்/செயல் அலுவலர்(கூ.பொ)**

## *ஒப்பந்தப்புள்ளி - பொது நிபந்தனைகள்*

1. ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையில் கலந்து கொள்பவர்கள், தமிழ்நாடு, இந்து சமய அறநிலையத்துறை சட்ட திட்டங்களுக்கும், விதிகளுக்கும் உட்பட்டு கலந்து கொள்ள வேண்டும். ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்பவர்கள் இந்து சமயத்தவராக இருக்க வேண்டும்.

2. ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் இந்து சமய அறநிலையத்துறை சட்டத்தின்படி நிர்ணயிக்கப்பட்டுள்ள விதிகளின்படி நடத்தப்படும். இந்த விதிகளின்படி ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்வது அறநிலையத்துறை ஆணையர் மறுப்பாணை அதிகாரத்திற்குட்பட்டது.

3. ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்பவர்கள் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பில் கண்டுள்ளபடி ஒப்பந்தப்புள்ளி முன்வைப்புத் தொகை ரூ.500/- வீதம் ஒவ்வொரு இனத்திற்கும் தனித்தனியாக வங்கி வரைவேலைகள் செலுத்தி மட்டுமே கலந்து கொள்ள வேண்டும். முன்வைப்புத் தொகை செலுத்தாதவர்கள் கண்டிப்பாக ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

4. ஒப்பந்தப்புள்ளியின் நிபந்தனைகளை கூட்டவும், குறைக்கவும் அல்லது மாறுதல் செய்யவும்,எவ்வித காரணமும் கூறாமல் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையை நிறுத்தி வைக்கவோ அல்லது ஒத்திவைக்கவோ திருக்கோயில் நிர்வாகத்திற்கு உரிமை உண்டு.

5. ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர்கள் முன்னிலையில் ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும். அதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி தொகையே உறுதி செய்யப்படும். ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்த பின் குறைந்த தொகைக்கு கேட்டவருடைய முன்வைப்பு தொகையை திருக்கோயில் கணக்கில் வரவு வைத்துக்கொள்ளப்படும். உரிம காலம் முடிந்த பின்பு முன்வைப்பு தொகை திரும்ப வழங்கப்படும் மேற்படி தொகைக்கு எவ்வித வட்டியும் கிடையாது.

6. ஒப்பந்தப்புள்ளி உறுதி பெற்றவர்கள் எக்காரணத்தைக் கொண்டும் அவ்வுரிமையை மாற்றம் செய்யவோ அல்லது பினாமியாக நடத்தவோ உரிமை கிடையாது. மேலும் தன் விருப்பப்படி உரிம காலத்திலிருந்து விடுபடவும் உரிமை இல்லை.

7. ஒப்பந்தப்புள்ளி உரிம காலத்தில் நிபந்தனைகள்படி ஒப்பந்த பணிகள்/பொருட்கள் சப்ளை செய்திட முடியாதுபோனால் மேற்படியார் வாரிசுகளே நிபந்தனைகளை நிறைவேற்ற கடமைப்பட்டவராவார். ஆனால் ஒப்பந்தப்புள்ளி உரிமத்தினை திருக்கோயில் நிர்வாகம் நிறுத்தம் செய்ய கருதும் பட்சத்தில் வாரிசுதாரர்கட்கு ஒப்பந்தப்புள்ளி பாத்தியதை இல்லை. புதிய ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டு வேறு நபருக்கு உறுதி செய்ய நிர்வாகத்திற்கு உரிமை உண்டு.

8. ஒருவர் கொடுத்த ஒப்பந்தப்புள்ளி திருக்கோயிலுக்கு சாதகமாக இருந்தபோதிலும், மேற்படியார் ஒழுங்காக பொருட்கள் சப்ளை செய்ய மாட்டார் எனவும், ஒப்பந்த வேலைகள் சரியாக செய்யமாட்டாரென்று திருக்கோயில் நிர்வாகம் கருதினால் மேற்படியாரது ஒப்பந்தப்புள்ளியை நிராகரிக்கவும் திருக்கோயில் நிர்வாகத்திற்கு முழு உரிமையுண்டு இதை ஆட்சேபிக்க யாருக்கும் எவ்வித உரிமையும் கிடையாது.

9. ஒப்பந்தப்புள்ளி கால வரம்பு 1431 ஆம் பசலிக்கு (01.07.2021 முதல் 30-06-2022 முடிய) மட்டும் என குறிப்பிட்டிருந்தாலும், திருக்கோயில் நிர்வாகம் விரும்பினால், ஒப்பந்தக்கால வரம்பை கூட்டவோ, அல்லது குறைக்கவோ உரிமையுண்டு.

11. 1431-ம் பசலி திருவிழா காலத்திற்கான ஒப்பந்தப்புள்ளி உறுதி பெறுபவர், அடுத்து வரும் **1432-ம்** பசலியின் ஒப்பந்தப்புள்ளி உறுதிபெறும் வரை 1431-ம் பசலியில் உறுதிபெற்ற ஒப்பந்ததாரரே 1431-ம் பசலி ரேட்டின் அடிப்படையில் **1432-ம்** பசலிக்கும் மேற்படி பொருட்கள் சப்ளை செய்யவும் மற்றும் ஒப்பந்த வேலைகளை செய்திட வேண்டும் என்ற நிபந்தனைக்கு உட்பட்டு ஒப்பந்தப்புள்ளி கொடுக்க வேண்டும்.

12. ஒப்பந்தப்புள்ளி உறுதி பெற்றவர் நிரந்தர கணக்கு எண் (PAN CARD) பெற்று இருக்க வேண்டும். ஒப்பந்தப்புள்ளி உறுதி பெற்றவரின் ஒவ்வொரு பட்டியல் தொகையிலும் வருமான வரி தனி நபராக இருந்தால் ஒரு சதவீதமும், நிறுவனமாக இருந்தால் இரண்டு சதவீதமும் பிடித்தம் செய்யப்படும். ஒப்பந்தப்புள்ளி இனங்களுக்கு விற்பனை வரி, சேவை வரி மற்றும் வருமான வரி நிர்ணய விகிதப்படி வரி பிடித்தம் செய்யப்படும் மற்றும் அரசுக்கு செலுத்த வேண்டிய இதர வரிகள் அனைத்தும் நடைமுறை விதிகளின்படி ஒப்பந்தப்புள்ளி தொகைக்கு கணக்கிட்டு உரிமதாரர் தமது சொந்த பொறுப்பில் செலுத்த வேண்டும்.

**இரா.கண்ணன் ஆதித்தன், M.S(USA)**
**தக்கார்**

**ம.அன்புமணி,M.A.,B.L.,**
**இணைஆணையர்/செயல் அலுவலர்(கூ.பொ)**